**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 274/2021**

**Prosecution Witness: 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : வெற்றிவேல் | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused )
**21.08.2024**
**முதல் விசாரணை**

நான் கீழநம்பியாபுரம் எட்டையாபுரம் தாலுகாவில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டுனராக பணி செய்து வருகிறேன். நான் தூத்துக்குடியில் உள்ள கண்ணன் என்பவருக்கு சொந்தமான பிரியங்கா டிரான்ஸ்போர்ட்டில் சம்பவ சமயத்தில் வேலை செய்து வந்தேன். கடந்த 21.01.2021 அன்று தூத்துக்குடியிலிருந்து பழனிக்கு நிலக்கரி லோடு ஏற்றிக் கொண்டு டிஎன் 69 ஏஎல் 7796 என்ற லாரியை நான்ஓட்டிக் கொண்டு வந்தேன். கப்பலூர் அருகே வ ந்த போது லாரியின் இடது புற பின்பக்க டயர் வெடித்தது. எனவே நான் லாரியை இண்டிகேட்டர் போட்டு இடது ஓரமாக மெதுவாக சென்று கொண்டிருந்த போது எனக்கு பின்னால் கோழியை ஏற்றிக் கொண்டு வந்த தோஸ்த் வண்டி அதிவேகமாக வந்து எனது லாரியின் பின்னால் மோதி தோஸ்த் வண்டியில் வந்த இரண்டு நபர்கள் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார்கள். தோஸ்த் வண்டியை ஓட்டி வந்த எதிரிக்கும் காயம் ஏற்பட்டது. சம்பவ சமயத்தில் தோஸ்த் வண்டியை ஓட்டியவரை நான் பார்த்தேன். அவரது பெயர் விஜய் என கேட்டு தெரிந்த கொண்டேன். நான் உடனே 108 ஆம்புலன்சுக்கு தகவல் சொல்லி காயம்பட்டவரையும் இறந்துபோனவர்களையும் மருத்துவமனை அனுப்பி வைத்தேன். அதன் பின்பு திருமங்கலம் காவல் நிலையம் சென்று நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது நான். இந்த புகாரில் உள்ள கையெழுத்தும் என்னுடையதுதான். மேற்படி புகார் அ.சா.ஆ 1 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்

**எதிரி தரப்பில் கு.வி**

நான் எத்தனை வருடம் ஓட்டுனராக பணிபுரிகிறேன் என்றால் 4 வருடம். சம்பவயிடமானது நான்கு வழிச்சாலை என்றால் சரிதான். சம்பவமானது இரவு 2 மணி என்றால் சரிதான். சம்பவத்தின் போது என்னுடைய லாரியில் டயர் வெடித்துவிட்டது என்றால் சரிதான். பின்னால் வாகனம் எப்படி வந்தது என்றால் தெரியாது என்றால் சரிதான். எனக்கு எந்தவித காயம் இல்லை என்றால் சரிதான். நான் வ ண்டியை நிறுத்தும் முன்பு  விபத்து ஏற்பட்டுவிட்டது என்றால் சரிதான். நான்தான் நான்கு வழிச்சாலையில் திடீரென வாகனத்தை நிறுத்தி விபத்து ஏற்பட காரணமாக இருந்துவிட்டு அதை மறைக்க எதிரியின் மீது பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிரியை பார்க்கவில்லை என்றும் எந்தவித சிக்கனலும் செய்யாமல் திடிரென வாகனத்தை நிறுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. என்னுடைய அஜாக்கிரதையால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. புகாரை நான் எழுதவில்லை என்றால் சரியல்ல. நான் காயம் அடைந்தவர்களை மருத்துவமனையில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.